ஶ்ரீ:
ஶ்ரீமதே இராமாநுஜாய நம:

## எங்களாழ்வான்
## வாழி திருநாமம்

சீராரும் வெள்ளறையில் சிறந்துதித்தோன் வாழியே
சித்திரை உரோகிணி நாள் சிறக்க வந்தோன் வாழியே
பார் புகழும் எதிராசன் பதம் பணிந்தோன் வாழியே
பங்கயச் செல்வியின் பதங்கள் பரவுமவன் வாழியே
திருக்குருகைப் பிரான் பிள்ளான் திருவருளோன் வாழியே
தீதிலா பாடியத்தைத் தேர்ந்துரைப்போன் வாழியே
தாரணியில் விண்டு மதம் தழைக்க வந்தோன் வாழியே
தண்ணிளியோன் எங்களாழ்வான் தாளிணைகள் வாழியே

---